DECEMBER 2013

# TCAV Messenger தூதுவன்

## 26TH YEAR CHRISTMAS EDITION NEWSLETTER




**Tamil Catholic Association of Victoria, Australia**
**விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம**

## TCAV ANNUAL CHRISTMAS FESTIVAL 2013

**Sunday 8th December 2013 at 3.30 pm**
**Venue: St. Gerard's Church, 71 Gladstone Road, Dandenong**
**FREE ENTRY & FREE DINNER (SPONSORED BY TCAV)**

**TAMIL MASS FOLLOWED BY FUN FILLED GAMES-ACTIVITIES AND AMUSEMENTS FOR ADULTS AND KIDS**

## NEW YEAR TAMIL MASS

**Year End Special Thanks Giving, Family Blessing and New Year Tamil Mass**

**Tuesday 31st December 2013 at 11.00 pm**
**Venue: St Paschal Theological Union Chapel, 100 Albion Road, Box Hill**

Invitation from..

# Tamil catholic Association of Victoria

## Annual Christmas Mass and Party

**Sunday 8th December 2014 – 3.30 pm**

**St.Gerard's Church, 71 Gladstone Road, Dandenong North**

ALSO PL. NOTE.

NEW YEAR TAMIL MASS & FELLOWSHIP

31-12-2014 AT 11.30PM

ST PASCHAL THEOLOGICAL UNION CHAPEL, 100 ALBION RD, BOX HILL

WE HAVE ORGANISED MANY FUN GAMES... ALL ARE WINNERS..

* NO PROFIT MAKING EFFORT * FUN IS THE OBJECTIVE

VALUABLE PRIZES — 10 TOKENS $5/= (TO COVER THE COST)




COME AND JOIN US AND APPRECIATE OUR KIDS CAROLS AND PLAY

Well-wishers...

Gifts For

### Auction & Raffles

WE NEED YOUR SUPPORT AND GOODIES (RANGING FROM $30-$200) FOR OUR RAFFLE, AUCTION


### CAKE & SWEET STALL

**TCAV LADIES AUXILIARY GROUP**


IS ORGANISING A CAKE & SWEET STALL TO RAISE FUNDS TO CONDUCT WORKSHOPS FOR OUR LADIES AND YOUNG ONES.

TO SUPPORT OUR LADIES, PLEASE BRING SAVOURIES – CAKES – SWEETS TO SELL AND RAISE FUNDS



Practice Manager
Stephen Selladurai
JAMES STREET MEDICAL CENTRE
Dr.Anne Sellathurai
M.B.B.S F.R.C.G.P
11/63 James Street,Dandenong 3175
Tel - 9793 1962
Fax - 9793 1924
email - jsmc_anne@hotmail.com


CRESTON
REAL ESTATE
changing dreams into reality
Thinking of Selling?
Would you like: A Free Market Appraisal?
A Second Opinion?
Sales Advice?
Call Ashton Ashokkumar NOW!
0405 559 766
SOLD!
Dandenong Central
Metro Village, Dandenong
Dandenong North
Dandenong North
www.crestonrealestate.com.au
PH: 03 9792 0042
264 Lonsdale St, Dandenong – 3175

# ORGANISATION CHART OF TCAV 2013–2014




NEWLY OPENED KITCHEN !!!
Corlam Kitchen
The Real Taste Of Home Style Cooking
BYO Restaurant
Eat in & Take Away
Original Malaysian Indian Mamak Curry
South Indian / Singaporean
Nasi Kandar / Tandoori / Sri Lankan
OPEN 6 DAYS A WEEK
11.00am to 10.00pm
(Tuesday - Sunday)
Home Delivery Available
Minimum order $ 35.00, Within 2 km radius only,
Others Delivery charges apply
We cater for all occasions
252, Blackburn Road, Glen Waverley
Ph: 9802 4111
www.corlamkitchen.com.au


Ranjana Fashion
Fascinating Shopping
for you and your dear ones
258 Blackburn Road
Glen Waverley, 3150
Victoria, Australia
M : 0403 114 783 / 0433 334 489
P : 03 9803 3503
E : leopillaij@hotmail.com

TCAV Messenger தூதுவன்

TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA

விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம்

26th Year Christmas Edition Newsletter Dec 2013





## ஆசிரியர் பக்கம் Editorial

**"You don't have to 'defend' Jesus or 'sell' Him. All you have to do is introduce Him! (Bob Gass)**

ஏன்? சங்கீதம் 34:8ல் சொல்கிறார் ; 'ஆண்டவரை ருசியுங்கள். ஏனெனில் அவர் நல்லவர்.'

புலம் பெயர்ந்த கிறிஸ்தவர்களாக வாழும் நாம், நம்மையே பார்த்துக் கேட்கவேண்டிய முக்கியமான கேள்விகளில் இது முதன்மையானது. TCAV தூதுவன் (MESSENGER) இதழின் நோக்கமும் தாக்கமும் இதேதான்.

P.O.Box 481,
Rosanna,
Victoria 3084,
Australia

Email
tcavinfo@gmail.com
SMS Only:
0468 771 015

பிரியமான நண்பர்களே,

அவ்வகை எழுத்து ஊடகம் மூலம் 'உலகை ஊடுருவ' எத்தனிக்கும் பற்பல முயற்சிகளில் சார்ந்தது தான் இந்த கிறிஸ்துமஸ் மடல். வெறும் செய்திமடலாக நில்லாமல், நம் உறுப்பினர்களின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் சாதனமாகவே உருவெடுத்திருக்கின்றது.

**We have managed to bring issue in multicolour print, thanks to our sponsors and we thank them wholeheartedly.**

2013ம் ஆண்டு பல பெரிய மாற்றங்களை சந்தித்துள்ளது. ஒரே ஆண்டில் இரண்டு திருத்தந்தையர்கள். பாப்பரசர் பதினாறாம் பெனடிக்ட் மூலம் ஆரம்பிக்கப்பட்ட விசுவாச ஆண்டு 2013 நவம்பர் 24ல் பாப்பரசர் பிரான்சிஸ் மூலம் நிறைவேற்றப்பட்டது. அரசியலிலும் மாற்றங்கள் பல. ஆஸ்திரேலியாவில், 7 ஆண்டுகளுக்கு பின் ஆட்சி மாறியுள்ளது. உலகளவில், தீவிரவாதத்தின் கோரப்பிடி இன்னும் இறுகியுள்ளது. Kenya Mall Attack, Syrian Chemical warfare, Boston Bombings எனப்பல இயற்கை சீற்றங்கள் பெருமளவில் உடமைகளையும், உயிர்களையும் பறித்தது. இந்தியாவின் உத்தரகாந்த் மாநில தீடீர் வெள்ளம் 6000 உயிர்களையும், ஹையான் புயலால் (பிலிப்பயின்ஸ்) 5000 மேற்பட்டவர்களும் உயிர் நீத்தனர். இலங்கையில் சொந்த மண்ணிலே அகதிகளாக வாழும் நம் தமிழ் உறவுகளும், தேர்தல்களை சந்தித்தாலும், நித்தமும் செத்துப் பிழைக்கின்றனர். இப்படி இன்னல்கள் மற்றும் இடர்பாடுகளினிடையேயும் நம்பிக்கை துளிரத்தான் செய்கின்றது.

ஒரு பறவை மரத்தின் கிளையில் அமரும் போது அது எந்த நேரத்திலும் முறிந்து விடும் என்ற பயத்தில் அமருவதில்லை. ஏன் என்றால் பறவை நம்புவது அந்த கிளையை அல்ல அதன் சிறகுகளை!

உன் மேல் நம்பிக்கை வை - உலகம் உன் காலடியில்!

அன்புடன்.. ஆசிரியர்குழு

**அந்தோனி பிரான்சிஸ், எலாடியஸ் பர்னாந்து**



# Cappuccino குடிக்கலாம் வாறீங்களா

**Your say and your view… A section for open chat**

**உங்கள் பார்வைகளும், விமர்சனங்களும்…**

**Please send your comments and views via e-mail or SMS to us**



**Email – tcavinfo@gmail.com**
**SMS only – 0468 771 015**

* கடந்த வருடம் மடுத்திருவிழாவுக்குப்பின் எமது தேவ அன்னையின் திருச்சுருபம் வாராவாரம் ஒவ்வொரு பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டு வெள்ளிக்கிழமை எமது ஆன்ம குருவானவருடன் நாம் இணைந்து திருப்பலிப் பூசையை எங்கள் வீடுகளிலேயே ஒப்புக்கொடுத்தது, மிகப்பெரிய வரப்பிரசாதம். இம்முறை இது தொடர்கிறதா? ஏன் இதை வேளாங்கணணி மாதா விழாவின் முடிவிலும் செய்யலாமே?
  *- ஷாமினி*

* ஜுலை மாதத்தில் வெளியான உங்கள் செய்தி மடல் மீண்டும் சோடை இழந்தும், பக்கங்கள் குறைந்தும் வந்தபோது மனதிலே ஒரு வருடல். " ஆக்கமிக்க ஆசிரியர் குழு என்ன ஆனது? புதிதாக உடைத்த சோடா போத்தல் போல் வீரியம் குறைந்துவிட்டதோ?" எங்கள் செய்தி மடல் மீண்டும் ஜொலிக்குமா?
  *- சாந்தி*

* இம்முறை தவக்கால ஞான ஒடுக்கத்தையோ அல்லது தியானங்களையோ நுங்கள் முன்பு செய்வது போல சிறப்பு கூடங்களிலே (e.g.Listerfield or Catholic Retreat Centres) ஒழுங்கு செய்யலாமே? வழக்கமான ஆலய வளாகத்தைவிட இவ்விடங்களில் ஒழுங்கு செய்யும் போது அது எம்மை ஒரு படி மேலே உயர்த்தி தயார் செய்கிறது. அதுமட்டுமல்ல தவக்கால ஞான ஒடுக்க விபரங்கள் பற்றி அறிவிப்பதைதாமதிக்காதீரகள்.
  *- அன்டனி*

* மாதாந்த தமிழ் பூசை வடக்கில் Bundoora, தெற்கில் Dandenong இலும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. மேற்கில் ஆரம்பிப்பீர்களா? மேற்கிலும் (Foothscray-Sunshine upto Pointcook and Werribee) பல இலங்கை-இந்திய மக்கள் குடிபெயர்ந்து விட்டார்களே? முடிந்தால் ஒழுங்கு செய்யுங்கள்.
  *- பீலிக்ஸ்-குலாஸ்-பெஸ்ரியன்… குடும்பத்தினர்கள்*

* கடந்த வருடம் போல இம்முறையும் TCAV நத்தார் கொண்டாட்டங்கள் ஜொலிக்குமா? கலகலப்பான பல கேளிக்கைகளை இணையுங்கள், நீங்கள் கூறும் தோழமை-நட்புறவு (Fellowship & Friendship) மேலும் மேலும் வளரும்.
  *- ஆனந்தன் & குமார்*

---

***For the best of Catholic programmes in Tamil on Satellite Television,***

madha

Broadcasting from 11/2/2013, on the feast of Our Lady of Lourdes, live

***Long awaited TCAV website under construction***

Our website will be officially launched on

New Years Eve on 1-1-2014

# THE TAMIL CATHOLIC ASSOCIATION, VICTORIA

P.O.BOX 481, ROSANNA, VICTORIA 3084, AUSTRALIA

A.B.N. 57 010 334 854 APPROVED CHARITABLE ORGANISATION VCGLR 58755

Email – tcavinfo@gmail.com SMS only - 0468 771 015




## தலைவரின் சந்திப்பு... In touch...

கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் சகோதர சகோதரிகளுக்கு.

மீண்டும் ஒரு புதிய நிர்வாக குழுவுடன் இணைந்து சந்திப்பதில் ஒரு தனி பெருமிதம் ! ஆம் புதிய குழு உற்சாகமானதும், பல புதிய செயல்திட்டங்களை சற்று நேர்த்தியாக செய்ய காத்திருக்கும் குழுவும் கூட. அதே வேளை என்னோடு தோளோடு தோளாய் நின்று 25வது வருட வெள்ளிவிழாவை விமர்சையாக நடத்திய எனது பழைய குழுவை நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறேன்.

பல திட்டங்களை நாம் தீட்டியிருந்தாலும் சிலவற்றை கடந்த வருடங்களில் நிறைவேற்ற முடியாமல் போனதில் ஒரு சிறு நெருடல் மனதில் தோன்றியதுதான். என்றாலும் நாம் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு திட்டத்தையும். நேர்த்தியாகவும் பலரும் விமர்சிக்கும் படியாகவும் செய்ததில் மிகப்பெரிய வெற்றி... ஆம் பலரும் விமர்சிக்கிறார்கள்.. பேசுகிறார்கள்.. கூடிய விரைவில் இவர்களும் எம்மோடு தோள் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு. எமது மெல்பொர்ன் தமிழ் சமூகத்துக்கும், உறவுகளுக்கும் நிறைய தேவைகள் இருக்கிறது. மீண்டும் மீண்டும் உதவிகளை தந்த வண்ணமே இருக்கும் உங்களில் சிலருக்கு நன்றியும் இறைவனின் ஆசீர்வாதங்களும் என்றும் நிறைந்து இருக்கும்.

**நான் முந்திய செய்திமடல்களில் குறிப்பிட்டது போல... சந்திப்பு என்பது எனக்கு மட்டும் தானா...?**

என்னோடு உடன் நின்று தோள் கொடுக்கும் எனது சக குழு உறுப்பினரையும் நீங்கள் சந்திக்க வேண்டும் என்பதே என் நோக்கம். இந்த செய்தி மடலில் உப செயளாலர் திரு. நவின் பர்னாந்து அவர்களையும் நலன்புரி சேவை செயளாலர் திருமதி. சாந்தி அன்டனி அவர்களையும் சந்திக்கிறீர்கள். எமது அடுத்த தவக்கால இதழில் உப தலைவர் திருமதி. எலிசபெத் டானியேல் அவர்களையும் செயற்குழு அங்கத்தவர் திரு. சந்திரகுமார் எமிலியானஸ் அவர்களையும் செய்தி மடலினூடாக சந்திப்பீர்கள்.

பொதுவாக தலைவரின் சிந்தனைப்பகுதியில் இந்த செயற்குழுவின் நடப்பு வருடத்துக்கான போக்கு மற்றும் நெறியாள்கை பற்றிய விளக்கங்களை அங்கத்தவர்கள் எதிர்பார்ப்பது வழக்கம். ஆகவே இந்த மடலில் அடுத்து வரும் பக்கங்களில் ஆங்கிலத்தில் "TCAV Plans and Strategies For Current Two Fiscal Period" என்ற தலைப்பில் இணைத்திருக்கிறேன்.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் இனிய 2014 புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக. Wishing you Merry Christmas and Happy New Year

**ELADIOUS FERNANDO (PRESIDENT)** +61 403 476 744 (0403 476 744)



PERPETUA MONEY TRANSFER
WorldWide
We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE
SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
RESPONSIBLE CUSTOMER SERVICE
CONVINENT WORLDWIDE LOCATIONS
EASY, QUICK INTERNET MONEY TRANSFER
Tel/Fax
03 8712 1406
Mobile
0423 094 478
Send Money to any Bank in Sri Lanka
Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478
Email: pmoneytransfer@ymail.com


HARVEY world travel
The Travel Professionals
LEVEL 2, FORESTHILL CHASE SHOPPING CENTRE
(JUST ABOVE FOOD COURT)
FORESTHILL, VIC 3131 PH: 98772444
Holyland Tour 28 APR – 08 MAY 2014
There is nothing deeper than your faith.
Going through the journey of Jesus from his birth in a manger to his death on a cross will connect you even more to the life of this man we all follow just like his disciples.
Our Next Holyland Tour Scheduled on 28 APRIL – 08 MAY
Price from $5037.00* (Single supplement $ 823.00*)
Optional stopover in Dubai can be organized)*
Tour spiritually led my catholic priests with regular masses throughout the trip.
Emotional-spiritual feedback from previous groups are testimony of our success.
For further information/ enquiries please call
03 98772444 or email foresthill@harveyworld.com.au




# Super Active Pope Francis

Vannai Rajan








**Pope meeting a face-less man affected by a terrible skin disease three weeks ago and hugging.**

**Also First Pope ever to wash and kiss the feet of juvenile prisoners on Holy Thursday.**

- Pope Francis is the first ever Jesuit Pope (Most Loyola, Xavier colleges are run by Jesuits)
- Was consecrated pope on 13 March 2013 and has done enormous things in just 8 months
- No pope has ever taken the name ‘Francis’ (after St. Francis of Assisi symbolising poverty).
- His original name was Jose Mario Bergoglio
- Wears only the iron pectoral cross. Does not wear the usual Gold cross
- He is only the second pope to refuse to live in Apostolic Palace.
- He still lives in the Vatican Guest House and pays his own bills.
- First time the Vatican Bank published its statement, under his instructions
- Abolished the annual bonus of 25000 euros given to cardinals on Vatican Bank Board
- Famously said “**The court** (people around Pope) **is the leprosy of the papacy”**
- As such, has appointed 8 cardinals from all over the world for revising Apostolic Constitution, including Indian and Australian Cardinals.
- First Pope ever to wash and kiss the feet of juvenile prisoners on Holy Thursday, which included a Muslim woman.
- Unprecedented worldwide consultation on modern families, including pastoral care for same-sex couples and allowing remarried divorcees to receive Holy Communion
- He is the first pope with the highest followers on Twitter and Facebook handles.

https://**twitter**.com/Pontifex
https://www.**facebook**.com/**PopeFranciscus**
Follow him and be a fan

# கிறீஸ்தவமும் வழிபாடும்

**இறைவார்த்தைகள், தேவ கருத்துக்கள், செய்திகள், அறிக்கைகள், விவிலிய கூட்டங்கள் பற்றிப் பகிர்ந்து கொள்வோம்.**

**Please send your artides and messages via e-mail or sms to us**

**Email – tcavinfo@gmail.com SMS Only - 0468 771 015**

ஒரு இறை சிந்தனை....

## கிறிஸ்து ஏன் பிறந்தார்?

அருட்பணி. ஜெரால்ட்



**"கிறிஸ்த்துமஸ்"** அன்று கடவுள் மனிதனானார் என்பது நாமறிந்த கதை. ஆனால் கிறிஸ்த்துமஸ் என்பது கடவுள் மனிதனான கதை என்பதைவிட கடவுள் தன்னை கோமாளியாக்கிக் கொண்ட கதை என்பது விவிலியத்தை சற்று ஆழ்ந்து சிந்தித்தால் புரியும்....!

யோவான் நற்செய்தியாளர் தம் நற்செய்தியில் வாக்கு மனிதனானார் என்று கூறுகிறார். வாக்கு மனிதனாவது என்பது அவ்வளவு லேசுப்பட்ட காரியமல்ல. இது மாபெரும் ஒரு அதிசயம், ஆச்சரியம், சாத்தியப்படாத ஒரு காரியம். ஏனென்றால் வாக்கு என்பது வெறும் எழுத்துக்களுக்களின் கோர்வையல்ல. இங்கு வார்த்தை எனப்படுவது இந்த பிரபஞ்ஜத்தை இயக்கும் மாபெரும் ஆதி சக்தி. வார்த்தை குறித்த வரலாற்று புரிதல் சர்வ வல்லமையும், ஆற்றலும், அனைத்து அதிகாரம் கொண்ட முழுமுதற் கடவுள் ஒரு சாதாரண மனிதனாக குழந்தையாய் இம்மண்ணில் பிறந்தது தம்மை தாமே கடவுள் சிறுமைப்படுத்திக்கொண்ட ஒரு செயல் என்று நமக்கு உணர்த்தும்.

**வார்த்தையா( வாக்கு ) அது என்ன?**

"தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அனைத்தும் அவரால் உண்டாயின".(யோவான் 1: 1-4)

"அவ்வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார்."( யோவான் 1:14)

ஏன் ஏதற்கு மனிதனானார்?




வார்த்தையான இறைவன் மனிதனாக பிறந்ததிற்கான காரணங்கள் மூன்று:

1. அன்பினால்
2. தந்தையை வெளிப்படுத்த
3. நம்மோடு உடனிருக்க

**அன்பினால்....**

கடவுள் குழந்தையாய் பிறப்பது என்பது அவ்வளவு எளிமையான ஒரு காரியமல்ல. அது ஒரு வரலாற்று நிகழ்வு. ஆனால், அதில் பெரும் வலி நிறைந்திருந்தது. அதிக தியாகமும், பெறும் இழப்புகளும், அளவு கடந்த அன்பும், அலாதியான பிரியமும் அடங்கியிருந்தது. கடவுள் தம் ஒரே பேறான மகனையே உலகிற்கு கொடுக்கும் அளவிற்கு உலகின் மீது முட்டாள் தனமான அன்பு கொண்டிருந்தார்.

கடவுள் மனிதனான நிகழ்வை நம் வீடுகளில் நடைபெறும் ஒரு சாதாரண நிகழ்வைக் கொண்டு புரிந்து கொள்ள அழைப்புவிடுக்கிறேன். நம் வீடுகளில் சிறு குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்த பெற்றோர்கள் அடிக்கடி யானையாகவும் குதிரையாகவும் மாறுவதுண்டு. குழந்தைகளை தம் முதுகுகளில் ஏற்றிக்கொண்டு யானை சவாரி செய்யாத தந்தைகளே இவ்வுலகில் இல்லை. காலையில் ஒரு வேளை அந்த தந்தை அவர் அலுவலகத்தில் தலைமை பொறுப்பில் இருக்கலாம் அல்லது ஒரு நாட்டின் தலைவனாக இருக்கலாம் ஆனால் மாலையில் அவ்வப்போது தம் அன்புப் பிள்ளைக்காய்

# கிறீஸ்தவமும் வழிபாடும்

**தமிழில் திருப்பலி**

மாதத்தின் 2வது ஞாயிறு — 3.30 pm St.Gerard's Church, Dandenong North

மாதத்தின் 3வது ஞாயிறு — 5.00 pm St.Damien's Church, Bundoora

யானையாகவும் குதிரையாகவும் மாறிப் போவதில் அப்பாக்களுக்கு அப்படியொரு அலாதிப்பிரியம். அப்படிதான் நம்மீது கொண்ட அன்பு வல்லமை மிக்க கடவுளை வலுவற்ற குழந்தையாய், ஆற்றல் மிக்க கடவுளை அடிமையின் உருவமாய் இறங்கிவர வைத்தது. விண்ணின்று மண்ணிற்கு இறங்கிய இந்த நிகழ்வை கடவுள் கோமாளியான கதை என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது.

**தந்தையை வெளிப்படுத்த....**

தந்தை இறைவன் தம்முடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் மனிதா் அனைவரும் அறிந்து கொள்ள ஒரு வார்த்தையாக தம்மை வெளிப்படுத்துகிறார். அந்த வார்த்தை தான் வார்த்தையான இயேசு. **கடவுளுடைய எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்த கடவுளை விட வேறு யாரால் இயன்றுவிட முடியும். கடவுளால் மட்டுமே** அது இயலும். இறைமகன் இயேசு என்பவர் இரத்தமும் சதையுமான இறைவனின் எண்ணமாய் இவ்வுலகில் வாழ்ந்தாா். எனவே இறைமகன் இயேசுவின் போதனைகள் அனைத்தும் தந்தை இறைவனின் எண்ண ஓட்டங்கள் தான் என்பதை இயேசுவே யோவான் நற்செய்தியில் 14:10ல் “நான் உங்களுக்கு கூறியவற்றை நானாக கூறவில்லை. என்னுள் இருந்து செயலாற்றுபவா் தந்தையே. நான் தந்தையுள் இருக்கிறேன் தந்தை என்னுள் இருக்கிறார்.” என்று தெளிவாக கூறுகிறார்.

**நம்மோடு உடனிருக்க.....**

“வாக்கு மனிதரானார். நம்மிடையே குடி கொண்டார்.” நற்செய்தியின் மூலப்பிரதியில் “குடி கொண்டார்” என்ற வார்த்தைக்கு ἐσκήνωσεν எஸ்கியோஸென் என்ற கிரேக்க வார்த்தையானது பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் கூடாரம் அமைத்தல் ( pitch-ing tent) என்பதாகும். யோவான் நற்செய்தியாளர் வார்த்தையான இறைவன் நம்மிடையே வந்து கூடாரம் அமைத்துக்கொண்டார் என்று கூறுகின்ற போது இஸ்ரேயலின் கடவுள் யாவே அக்காலத்தில் உடன்படிக்கை கூடாரத்தில் இறங்கிவந்து பிரசன்னமானதை போன்று வார்த்தையான இறைவன் நம் மத்தியில் தம் பிரசன்னத்தை கூடாரம் அடித்து வாழ்கிறார், நம்மை வாழ்விக்கிறார் என்று இயம்புகிறார். மலைகளிலும் வானங்களிலுமாய் மக்களைவிட்டு கடந்து நின்ற கடவுள் இப்போது வார்த்தை மனுவுருவானதின் வழியாக தம் மக்களோடு மக்களாய் கலந்து இம்மானுவேலனாகிவிடுகிறார். வார்த்தையான இறைவன் நம் மத்தியில் வாழுகின்ற இறைவனாய் இருக்கிறார் நம்மை வாழ்விக்கின்ற இறைவனாய் உடனிருக்கிறார்.

**இறைவார்த்தையின்**
**இத்தகைய பிறப்பு நாம் பெற்ற வரம்!**
**இதை உணர்ந்தால்**
**அதுவே நாம் செய்யும் பெரும் தவம்!**

## வாராந்த நற்செய்தி வாசகங்களும் அதன் கத்தோலிக்க விளக்கங்களும் விரைவில் உங்கள் வலம் வரும்



**மரித்த ஆத்துமாக்கள் நினைவு**

**உங்கள் அறிவித்தல்களை**

**E-Mail மூலமாக தரியப்படுத்துங்கள்**

**மரண அறிவித்தல்**


**Derick Royston Johnpillai** (49), Mill Park (Karamban,Kayts) rest in peace on 3.12.2013. Treasured wife of Imelda Royston, Loving farther of Angela Royston and Brother of John Priyan. Funeral will be notified later.

# TCAV KIDS Zone



Email:tcavinfo@gmail.com SMS Only :0468 771 015

உங்கள் மழலைச் செல்வங்களை ஊக்கப்படுத்துங்கள்! அவர்களுக்கான ஆக்கங்களை நீங்கள் கூட எழுதலாமே?



தொகுப்பு
சாந்தி சந்திரகுமார

*அன்பான பிள்ளைகளே அழகான வர்ணப் பூக்கள் போல, சின்ன பட்டாம் பூச்சிகள் போல, மனதை கொள்ளை கொள்ளும் உங்களுக்காக ஒரு சிறுவர் பகுதியை இவ்வேட்டில் வெளியிடுகின்றோம். இதனை வாசித்தபின் இதைப்பற்றிய கருத்துக்களை தெரிவியுங்கள்.*




## கடவுள் பார்க்கிறாரே...

(குட்டிக்கதை)

திருட்டு தொழில் செய்கின்ற ஒரு தகப்பன், ஒரு நாள் இரவு தன் மகனுக்கும் பழக்க எண்ணி தன்னோடு ஒரு வீட்டிற்கு அழைத்துச்சென்றான். அந்த வீட்டிற்கு அருகில் இருந்த மரத்தின் மீது மகனை ஏற்றிவிட்டு, யாராவது நம்மைக்கண்டால் விசில் அடிக்கும்படி மகனுக்கு கூறி விட்டு மரத்தைவிட்டு இறங்க முயன்றான், ஆனால் மகன் எதையும் யோசிக்காமல் உடனே விசில் அடித்தான். தகப்பன் பதற்றமுற்று "யாரும் நம்மை பார்த்துவிட்டார்களா" எனக் கேட்டான். அதற்கு மகன், "அப்பா எங்களை எவ்வேளையும் கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறாரே! களவு செய்தல் தவறல்லவா?" என்று கேட்டான்.


***இதிலிருந்து நான் அறிவது என்னவென்றால்.." கடவுள் எப்போதும் எம்மோடு இருக்கிறார்"***

***டானியேல் ஜெயநாதன்***

Hi Kidos! our Christmas Party on
Sunday 8th December
at Dandenong.
Plenty of fun Packed Event
Games – Activities – Funs
DON'T MISS THIS EVENT

## How St. Nicholas Became Santa Claus

In the 16th Century in Europe, the stories and traditions about St. Nicholas had become very unpopular. But someone had to deliver presents to children at Christmas, so in the UK, he became 'Father Christmas', a character from old children's stories; in France, he was then known as 'Père Nöel'; in Germany, the 'Christ Kind'. In the early USA his name was 'Kris Kringle'. Later, Dutch settlers in the USA took the old stories of St. Nicholas with them and Kris Kringle became 'Sinterklaas' or as we now say 'Santa Claus'!.





Many countries, especially ones in Europe, celebrate St. Nicholas' Day on 6th December. In Holland and some other European Countries, children leave clogs or shoes out to be filled with presents. They also believe that if they leave some hay and carrots in their shoes for Sinterklaas's horse, they will be left some sweets. St. Nicholas became popular again in the Victorian era when writers, poets and artists rediscovered the old stories.


# TCAV KIDS Zone



Email – tcavinfo@gmail.com

SMS Only – 0468 771 015

## ஜோனா JONAH



தம்பி, தங்கையரே, Jonah எனும் தீர்க்கதரிசியை, கடவுள் ஒருமுறை "Nine-veh" எனும் நகருக்குச் சென்று அங்கு "மக்கள் எனக்கு எதிராக பாவம் செய்கிறார்கள், அவர்களை மனம் திரும்பும்படி சொல்" என்று கூறினார். ஆனால் Jonah , நினிவே நகர மக்களிடம் கடவுள் சொன்னதை கூறினால் தன்னைத்தான் உதைப்பார்கள் என்றெண்ணி, ஒரு படகில் ஏறி கடவுளிடம் இருந்து ஒளித்து ஓடினார். எல்லாம் அறிந்த கடவுள் , அவர் சென்ற திசையில் பெரும் புயலை உருவாக்கினார்.

திடிரென புயலைக்கண்டு மக்கள் அச்சமுற்று, கடவுளை மன்றாடினர். Jonah அவர்களிடம் " நான் கடவுள் சொன்னதை செய்யாது வந்ததினால் கடவுள் என்னை தண்டிக்கிறார், நீங்கள் என்னை படகில் இருந்து கடலில் தள்ளிவிடுங்கள்" என்று அவர்களிடம் கூறினார். இதைக் கேட்ட மக்கள் அவர் விருப்பப்படியே கடலில் தள்ளி விட்டனர். புயல் அமைதியுற்றது. கடலில் வீழ்ந்த Jonahவை பெரிய மீன் ஒன்று விழுங்கி 3 நாட்களின்பின் நினிவே நகர் கடற்கரையில் Jonahவைக் கக்கிற்று. அவர் கடவுள் கூறியதைச் செய்யாமல் அவருக்குத் தெரியவராது என ஒளித்து ஓடியதற்காக மனம் வருந்தி,, கடவுள் கூறியபடி நினிவே மக்களிடம் சென்று அவர்களை மனம் திரும்பும்படி கூறினார்.



⁂

## BOXING DAY THE DAY AFTER CHRISTMAS!

Boxing Day takes place on December 26th and is only celebrated in a few countries. It was started in the UK about 800 years ago, during the Middle Ages. It was the day when the alms box, collection boxes for the poor often kept in churches, were traditionally opened so that the contents could be distributed to poor people. Some churches still open these boxes on Boxing Day.

## உங்களுக்கு தெரியுமா?

**தம்பி தங்கையரே!**

**நீங்கள் அறிந்து கொள்ள ஒரு சிறு விடயம்**

*திருப்பலி எத்தனை பகுதியா பிரிக்கப்பட்டுள்ளது ?*

பாவமன்னிப்பு
வாசகம்
நற்கருணை எழுந்தேற்றம்

*குருவானவர் ஏன் தண்ணீருடன் wine ஐ கலக்கின்றார் என்று?*

மனிதத்தன்மையையும் இறைமையையும் காட்ட..

# தமிழ் கத்தோலிக்க சங்க மங்கையர் குழு
# TCAV Ladies Auxiliary Group

Email – tcavinfo@gmail.com SMS Only - 0468 771 015

***அன்புள்ள தமிழ் கத்தோலிக்க நண்பர்களுக்கு,***



இந்திய மண்ணில் பிறந்து இப்போது ஆஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்து கிட்டத்தட்ட 17வருடங்களாக மெல்பர்னில் வசித்து வரும் எனக்கும் என் குடும்பத்துக்கும் தமிழ் மக்கள் கூடும் கொண்டாட்டங்கள் இன்பம் தரும். அதிலும் தமிழ் கத்தோலிக்க திருப்பலி-ஜெப ஆராதனைகள் இன்னும் மிகுந்த மகிழ்ச்சியே.

TCAV யின் சேவைகளை பார்த்து நானும் ஏதோ வகையில் பணிசெய்ய வேண்டுமென நினைத்திருக்கிறேன். அதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு ஆண்டவருக்கு நன்றிகள்!

தமிழில் நடக்கும் ஆராதனைகள் - ஜெப வழி-பாடுகள் நமது அடுத்த அவுஸ்திரேலிய சந்ததியரான நம் குழந்தைகளுக்கு மிகவும் முக்கியம். அந்தப்பணியை எனது குடும்பம் எனது வேலை என்று இல்லாமல் இறை சேவைக்கு, ஒரு கொஞ்ச நேரமாவது என்னை ஒதுக்கச் செய்தது இறைவன் சித்தம்.

பெண்கள் - இளம் சிறுவர் சிறுமியரை TCAV இல் செயல்பாடுகளில் ஈடுபடுத்த விரும்புகிறேன்.
இதுவே என் விருப்பம்! நோக்கம்!!.
உங்கள் அனைவருக்கும் கிறுஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்.
அன்புடன்
**சாந்தி அன்டனி**
(நலன்புரி சேவை செயலாளர்)

## ஏன் இந்த TCAV Ladies Auxiliary குழு?

எமது TCAV சங்கத்தின் உப சங்கமான **TCAV Ladies Auxiliary Group** தற்போது இயங்கிக்கொண்டிருக்கிறது. North - Mill Park -Bundoora கிளை தனது முதல் Fact Finding கலந்துரையாடலை தொடர்ந்து Workshop ஆரம்பித்து விட்டது. South - Dandenong-Moorabbin கிளை ஆரம்பவேலைகள் TCAV வெள்ளி விழா காரணங்களால் தாமதித்துவிட்டது. அடுத்த வருடம் விடுமுறைகளுக்கு பிறகு ஆரம்பமாகும்.

<u>இதன் முக்கிய நோக்கங்கள்:-</u>

*TCAV க்கு ஒரு satellite குழுவாக துணைபுரிதல்*
*விவிலிய மற்றும் செபமாலை பக்தியை எம்மிடையே வளர்த்தல்*
*எமது சகோதரிகளின் ஆன்ம மற்றும் சமூக நல திட்டங்களை மேம்படுத்துதல்.*
*எமது இளையோரை(Youth) ஓரளவுக்காவது எம்மோடு இணைத்தும், அணைத்தும் அடுத்த படிக்கு கொண்டு செல்லுதல்*

இங்கே தலைமையோ, குழுக்கூட்டங்களோ இருக்காது.
A casual and informal friendship group.
எமது சங்கத்தை இன்னும் பல ஆண்டுகள் நடத்தி நாம் ஓய்வு பெரும் காலங்களில் ஒரு ஆராதனையோ, விவிலிய வழிபாடோ, திருப்பலியோ, அல்லது ஓய்வு விடுதியில் இளைப்பாற சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் தமிழில் வழிபட கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவதை தடுப்பதற்காக செய்ய வேண்டிய அடிநிலை திட்டமே (Strategic Planning) இது. இந்த தார்மீக கடமையை, தாயாகவும் தாரமாகவும் இருக்கும் எமது மாதரால், நோகாமலும், ஓசைபடாமலும் நிறைவேற்ற முடியும்.
⁂

**NORTHERN REGION-BUNDOORA**

**Ladies! We are glad to inform you that we conducted our 1st workshop in "Saree blouse & Churithar making" in Bundoora.**

**SOUTHERN REGION – DANDENONG**

**We had very poor response... so far only two ladies contacted us. Due to less numbers were unable to proceed.**

**We would like to meet you for fact finding session.**

## TCAV PLANS AND STRATEGIES FOR THE CURRENT TWO FISCAL PERIODS 2012–2014
## எமது சங்கத்தின் திட்டங்களும், செயற்பாடுகளும் (இரண்டு ஆண்டுகளுக்கு 2012-2014)

### TARGETED TO ACHIEVE
அடுத்த கட்டம் விரைவில் ஆரம்பம்

**Charitable Organisation**
(work in progress about to be completed soon)

- Completion of ATO Paper works and ATO Approval

**Media and Public Relations and Communications**
(work in progress about to be completed soon)

- Registering TCAV Main Logo and Sub Logos
- Finalising Design and Format of TCAV materials
- Launching TCAV Website
- Newsletter Publication – Four Issues per year

**TCAV Liturgy Programs**

- "ஞான ஒடுக்கம் - Gnana Odukkam" and Day or Weekend outreach presented by special priest from South India **
- Day of outreach presented by special guest (priest or charismatic preacher from India or Sri Lanka)**

**TCAV Tamil Affairs ****

- Make our members aware that "Tamil Affairs" is part of our mission in addition to our primary missions "Worship, Fellowship and Friendship"
- Appointing a Team of Subject Matter Experts and well wishes to the sub team
- Organising Dialogue with Tamil Diasporas, Sri Lankan and Australian Government officials

**TCAV Community Help to Tamils ****
(work in progress about to be completed soon)

- A TCAV Sponsored After School Tuition
- TCAV Sponsored Adult/Youth Apprentice Training in Tamil Areas and/or Refugees in Sri Lanka or India

> ** இவை திட்டமிடலில் இருந்து நிறைவு பெறுவதற்கு உங்களின் முழு ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே சாத்தியப்படும்

### CHRISTMAS EDITION UPDATE



### ACHIEVED OR WORK IN PROGRESS
வெற்றிகரமாக நடப்பவையும். நிறைவேற்றியவையும்

All the below projects have been completed.

**AGM and New Committee Matters**

**Charitable Organisation**

- Charitable Organisation Approval
- Complete ATO formalities next year

**Our lady of Madu Feast**

**TCAV Silver Jubilee Event (Mass & Dinner)**

- Celebrated a grand high mass with Bishop Most Rev.Peter Elliot and Bishop Most.Rev.Thomas Sovundaranayagam
- Bishop Thomas Sovundaranayagam, visited detention centres in Sydney and Melbourne meeting Tamil refugees.
- Bishop Thomas Sovundaranayagam also met Parliamentarians and Government officials in Canberra and Melbourne to explain current situation in war effected part of Sri Lanka and request assistance and to consider economic development projects.

**Media and Public Relations and Communications**

- Design and Release of TCAV Logo
- Release of Spring Edition Newsletter
- Release of Christmas Edition Newsletter
- Planning underway to launch our TCAV Website in the next quarter.

**TCAV Mini Raffle**

- Sales and distribution
- Planning the Mini raffle draw in our annual Christmas Party.

**TCAV Ladies Auxiliary****

- Northern region already commenced and workshops are being conducted.
- We were unable to commence initial fact finding session and workshops due to clash with silver jubilee event. Plans are under way to commence souther region activity during early next.
- Waiting to officially Inaugurate TCAV Ladies Auxiliary Group once North and South is in operation.

**Organising Annual Christmas Mass and Party**

**Organising A Gala Event for everyone to Celebrate our Silver Jubilee and officially End Silver Jubilee celebrations by July 2013 ****

# உண்மையா அது என்ன?

**ஒரு சமூகப் பார்வை**

**அலசுபவர் - நிர்மலா அல்போன்ஸ்**



**நம்** வாழ்க்கையின் பல சந்தர்ப்பங்களில் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய முக்கியமான கேள்வியிது. நீதியிருக்கையில் அமர்ந்து, வழக்குகளை விசாரணை செய்து மக்களுக்கு நீதித் தீர்ப்பு வழங்கும் மிகப்பெரிய பொறுப்பை வகித்த பிலாத்து, இயேசுவை பார்த்துக் கேட்கிறான்- 'உண்மையா! அது என்ன?' பொதுமக்களும், சீடர்களும் பலரும்
இயேசுவிடம் கேள்விகள் கேட்டபொழுது, உவமைகளோடும் உவமானங்களோடும் விளக்கம் கூறிவந்த இயேசு, பிலாத்துவின் இந்தக் கேள்விக்குப் பதில் கூறியதாக விவிலியத்தில் நாம் காண்பதில்லை!

உண்மையா! அது என்ன? இக்கேள்விக்கு ஒரு சமூகத்தின் பார்வையில் விடை காண உங்களை அழைக்கின்றேன். நான் சிறுமியாக இருந்த பொழுது கேட்ட கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.



குருடர் ஐந்துபேர் யானை எப்படி இருக்கும் என்பதை தெரிந்து கொள்ள யானையைத் தடவிப் பார்க்கின்றனர். காலைத் தடவியவர் யானை பெரிய தூண் போலிருக்குமென்றும், காதைத் தடவியவர் யானை பெரிய முறம் போலிருக்குமென்றும், ஐந்து பேரும் தாங்கள் தொட்டு உணர்ந்த அனுபவத்தின் வாயிலாக யானைக்கு வடிவம் தந்தனர். அதையே உண்மை என்றும் நம்பினர். சிறுமியாக இருந்தபோது இந்த கதையை கேட்டு விழுந்து விழுந்து சிரித்திருக்கின்றேன். ஆனால் பல அனுபவங்களை கடந்தபின், இப்பொழுது ஒரு மெலிதான வலியைத்தான் உணர முடிகிறது.

இந்த ஐந்து குருடர்களோடு ஒரு சமூகம் அல்லது ஒரு குழுவை நான் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். ஒவ்வொருவரும் தங்களின் சொந்த அனுபவம், உணர்வுகள், வளர்ந்து வந்த சூழல், கடைப்பிடித்து வந்த மதிப்பீடுகள் இவற்றை மையமாக வைத்து ஒரு செயலை அல்லது ஒரு கருத்தை சரி என்றும் உண்மை என்றும் நம்புகின்றனர். ஆனால் உண்மையை அறிய தராசுத்தட்டில் நாம் வைக்கும் எடைக்கற்கள் அனுபவம், உணர்வு, சூழல், மதிப்பீடுகள். இவை குழுவில் இருக்கும் ஒருவருக்கொருவர் மாறுபடுவதால் ஒருவருக்கு சரி என்றும் உண்மை என்றும் தோன்றுவது மற்றவருக்கு தோன்றுவதில்லை. ஒரு குருடனின் தனியொரு அனுபவம் மட்டும் யானையின் முழு வடிவத்தை தருவதில்லை. மாறாக ஐவரின் அனுபவத்தையும் சேர்த்தால் மட்டுமே யானை முழு வடிவம் பெறும். அதே போல் ஒருத்தனிப்பட்டவரின்

அனுபவம் மட்டும் ஒரு செயலுக்கு முழுமையான வடிவம் தர முடியாது!

அப்படியானால் உண்மையை எப்படித்தான் தெரிந்து கொள்வது? உண்மை என்பது கண்ணால் காண்பதுமில்லை, காதால் கேட்பதுமில்லை. உண்மை என்பது நம் உள்ளத்தால் நோக்குவது. தீர விசாரிப்பது. அப்படியில்லையெனில், **'நானே உண்மையும், உயிரும், வழியும்'** என்று வெளிப்படையாக கூறிவந்த இயேசுவை கண்டிருந்தும், குருடராயிருந்த பிலாத்துவைப் போலிருப்போம். நம் மனக்கதவுகளைத் திறந்து,

எப்படி எனது அனுபவமும், மதிப்பீடுகளும் சூழ்நிலையும், உணர்வுகளும், உண்மையோ அது போலவே சக மனிதனுடையவையும் உண்மையே என்ற புரிதலை புத்தி ஏற்கின்றதோ அப்பொழுதுதான் ஒரு செயலுக்கு அனைவரது அனுபவத்தையும் சேர்த்து ஒரு முழுமையான வடிவம் தர இயலும்.

நான் எங்கோ கேட்டிருக்கின்றேன் 'உண்மை என்பது ஒரு இலக்கு அல்ல! மாறாக அது நாம் தேடுகின்ற பயணம்.' பாலன் இயேசு வருகைக்கு தயாராகும் இவ்வேளையிலே, அவர் பிறப்பின் உண்மையான அர்த்தத்தை அறிவோமாக; 'உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என குரலுக்குச் செவி சாய்க்கின்றனர். ⁂






சம்மனசு சகாயராஜ்


**சேசு பாலனே** என்மேல்
நேசம் காத்தும் மனமே
பாசம் பொழியும் உன்னிடம்
யாசிக்க வந்திட்டேன் நான்!

வளமான வாழ்வெனக்கு
வரமாக வேண்டுமென
வாழ்ந்திடும் உள்ளங்கள் - நிதம்
விரும்புவது நிஜமே! - ஆனால்
நலமான கிறித்துவமே
பலமான வளமென
அறிந்தவர்கள் எத்தனை பேர்?

வசதி என்பது நான்
வாழ்வதை பொறுத்தது!
வளமும் நலமும் எனக்குள்ளே
கண்டு கொள்ளும் பார்வையை
கனிவுடனே தந்திடு!
கர்த்தரில் வாழ்ந்திட - எனை
கரம் பிடித்து நடத்திடு! - உந்தன்
பிறப்பு விழா என்னையும்
புதிதாய் பிறக்கச் செய்யட்டும்!

We need advertisers!..
Our Circulation is just over
400+ Tamil Families and
300+ E-Mails
400% Bigger Than Show Souvenir
and Target Audience


ASI BLINDS
WE MANUFACTURE USING
HIGH QUALITY MATERIALS
AS PER YOUR REQUIREMENTS AND DESIGN
VERTICAL BLINDS
HOLLAND BLINDS
VENETIANS
ROLLER SCREENS
TIMBER VENETIANS
TIMBER SHUTTERS
ROLLER BLINDS
CURTAINS
FREE QUOTES AND VERY COMPETITIVE PRICE
WE COME TO YOU 7 DAYS A WEEKS
ASI BLINDS
FACTORY 2, 1364 HEATHERTON ROAD
DANDENONG 3175
SUREN 0413 103 687


Vinitha's
STYLE 'N' BEAUTY
Hair cuts
Colouring
Styling
Threading
Facials
Make – Up
Saree Draping
Bridal Dressing
Trading Hours
Tue - Sat: 9 am - 6pm
Sunday: 9 am - 4pm
Monday Closed
Booking By Appointment only
Tel: 03 9792 4686
Mobile: 0430 468 519
28A Curtin Crescent, Dandenong North
VIC 3175

# TCAV ஆன்ம குருவின் ஆசியுரை..



**இயேசுவில் இனிய வாசகர்களே**

கிறிஸ்து பிறப்பு விழா மகிழ்ச்சியின் விழா! இந்த நாளில் உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்.

இந்த விழாவின் இனிமையில் ஏராளமான சிந்தனைகள் நம் இதயத்தில் எழுகின்றன. ஆனாலும், ஒரே ஒரு சிந்தனையை மனதில் இருத்தி இறைவனுக்கு நன்றி சொல்வோம்.

இயேசு இவ்வுலகில் ஒரு சிறு குழந்தையாகப் பிறந்தார் என்பது கிறிஸ்து பிறப்பு விழாவின் மையமாக உள்ளது. அக்குழந்தை மனித இனத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற தெய்வக் குழந்தை. அதே நேரத்தில் மனித இனத்தோடு தம்மை ஒன்றித்துக்கொண்ட கடவுளின் வெளிப்பாடு. மரியாவின் மகனாகப் பிறந்த குழந்தையைக் கண்டு வணங்கிட இடையர்கள் செல்கிறார்கள். இடையர்கள் அக்காலத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்த வகுப்பினர். உலகத்தை மீட்க வந்த கடவுளுக்கு வணக்கம் செலுத்திட இவ்வுலகப் பெருமக்கள் வரவில்லை, மாறாக, இவ்வுலகம் கடையர் என யாரைக் கருதுகிறதோ அவர்களே கடையராக வந்து பிறந்து குழந்தையை அடையாளம் கண்டுகொள்கிறார்கள். அவர்கள் இயேசுவுக்கு வணக்கம் செலுத்தியபோது விண்ணகமும் அவர்களோடு சேர்ந்துகொண்டது என லூக்கா விளக்குகிறார்.,

கடவுளின் மாட்சியும் மனிதரின் வாழ்வில் நிலவுகின்ற அமைதியும் தொடர்புடையனவா? கடவுளே மனிதராக மாறிவிட்டதால் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே நெருங்கிய பிணைப்பு உருவாகிவிட்டது. அப்பிணைப்பின் விளைவுதான் மனித வாழ்வில் கடவுள் வழங்குகின்ற அமைதி. இந்த அமைதி வெறும் உளவியல் சார்ந்த சலனமற்ற நிலையைக் குறிப்பதில்லை. இந்த அமைதி கடவுளிடமிருந்து நமக்கு வருகின்ற ஒரு கொடை. கடவுளே தம்மை நம்மோடு பகிர்ந்துகொள்வதின் அடையாளம் இந்த அமைதி.

இறைவா, எங்களுக்கு உம் அமைதியைத் தந்தருளும். ⁂




விக்டர் Carrum Downs



**தேவையான பொருட்கள்;**

கடலை மாவு - 1\2 கிலோ
சர்க்கரை - 1 கிலோ
ஏலக்காய், லவங்கம், பச்சை கற்பூரம் தூள் - 1 ஸ்பூன்
சோடாமாவு - 1 சிட்டிகை
உப்பு - 1 சிட்டிகை
பொரிப்பதற்கு - தேவையான அளவு எண்ணெய் (அ) நெய்
முந்திரி, காய்ந்த திராட்சை - தேவையான அளவு



**<u>செய்முறை;</u>**

1. கடலைமாவுடன் உப்பு, சோடாமாவு சேர்த்து தோசைமாவு போல் கரைக்கவும்.
2. ஒரு கப் தண்ணீர் விட்டு (சர்க்கரை மூழ்குமளவு தண்ணீர் விட்டு) கேசரி கலர் கலந்து சர்க்கரை நன்றாக கரைந்து கொதித்து வந்தவுடன் இறக்கிவிடவும்.
3. வானலியில் எண்ணையிட்டு நன்றாக காய்ந்தவுடன் கடலை மாவை ஒரு கரண்டியில் எடுத்து பூந்தி கரண்டியை எண்ணெய்க்கு மேல் பிடித்து மாவை ஊற்றவும்.
4. மாவு பூந்தியாய் முத்துக்களை போல் எண்ணெயில் விழுந்தவுடன் மிதமான பதத்தில் எடுத்து சர்க்கரையில் போடவும்.
5. பூந்தி சர்க்கரையில் நன்றாக ஊறியவுடன் ஏலக்காய், லவங்கம், பச்சை கற்பூரம் தூளை போட்டு வறுத்த முந்திரி திராட்சைகளைப் போட்டு பூந்தியை உருண்டையாக பிடிக்கவும்.

**லட்டு ரெடி!**

HEATHERTON ROAD DENTAL CLINIC



Dr. Basty Y.Douglas B.D.S (PERA)
Dr.(Mrs.) Kamala N.Douglas B.D.S (PERA)
1469 Heatherton Road
Dandenong North, Victoria 3175

Tel: 9793 4424 Fax:9793 4282

heathertondental.com.au

## TCAV செயலாளரின் சிறுமடல்..



அன்பான தமிழ் கத்தோலிக்க சங்க உறுப்பினர்களுக்கு,

மீண்டும் ஒரு மடலிலே இணைவதில் மகிழ்ச்சி.

எமது சங்கம் 25ஆவது வருட நிகழ்வுகளை விமரிசையாக முடித்தவுடன் மீண்டும் புத்துணர்ச்சியுடன் பல திட்டங்களை தீட்டி செவ்வனே செய்து வருகிறது.

இந்த வருடத்தில் மடுமாதா திருவிழா, அவுஸ்திரேலியா - சிரிலங்கா கத்தோலிக்க சங்கத்தோடு இணைந்து ஒப்புக்கொடுத்த திருப்பலி, இந்திய நண்பர்களுடன் இணைந்த சில நிகழ்வுகள், மற்றும் நீங்கள் காணும் இந்த நத்தார் விஷேட செய்தி மடல் போன்றவை சிறந்த சான்று. வரப் போகும் நத்தார் விழா கொண்டாட்டங்கள் சற்று மாறுபட்டதாக உங்களை கவரும் என நம்புகின்றோம்.

நாம் செய்ய நினைத்தவையையும் அதன் விபரங்களையும் இந்த இதழில் "TCAV Plans and Strategies For Current Two Fiscal Period" என்ற தலைப்பில் இணைத்திருக்கிறோம். தயவு செய்து வாசித்துப்பாருங்கள். நிறைவேற்றிய திட்டங்களின் ஆழமும் தரமும் உங்களுக்குப் புரியும்.

உங்கள் அனைவருக்கும் எனது இனிய நத்தார் வாழ்த்துக்களும், மலரும் 2014 புத்தாண்டு வாழ்த்துக்களும் உரித்தாகுக.

அன்பில் உங்கள்

**ஆல்பிரட் டிரோன் ஞானப்பிரகாசம்**
செயலாளர்

## TCAV பொருளாளர் மடல்..



Dear TCAV Members and Friends,

**தயவு செய்து உங்கள் TCAV வருட அங்கத்துவ மற்றும் ஆன்ம குரு பராமரிப்பு சந்தாக்களை நிலுவைகள் இல்லாமல் உடனடியாக செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.**

**Annual Membership $40 ($20 Concession)**
**Chaplain Maintenance $60 (or $5/month)**

This is a kind reminder to you about the Tamil Catholic Association of Victoria's Membership Fee and Chaplain Maintenance Fund for the financial year 2013/ 2014. As we are in the middle of the financial year please be kind enough to pay your Membership and Chaplain Maintenance Fund Fees as early as possible. Some of you have paid membership fee only and please pay Chaplain Maintenance Fund Fee also if possible.

**For Membership Fee Deposits:**

Name of Account Holder - "Tamil Catholic Association of Victoria"

Bank, State & Branch (BSB) No. – 06 3245

Account Number – 10031975.

**For Chaplain Maintenance Fund Deposits:**

Name of Account Holder - "Tamil Catholic Association of Victoria – Chaplain's Fund"

Bank, State & Branch (BSB) No. – 06 3245

Account Number – 10512920.

Please contact me on (03) 9795 7798(AH) or 0439 302 597 if you need further information.

Thank you and God Bless.

Yours sincerely **Alfred Reynald.**

**TCAV Youth** is a section we like to introduce in our newsletter to integrate with our adolescent members.

**PLEASE SEND YOUR ARTICLES ON VIEWS, EXPERIENCE AND SOCIAL ACTIVITIES**

Email – tcavinfo@gmail.com SMS Only - 0468 771 015




Angelo Tyrone (Year 8)
Nazareth College, Noble Park

I am delighted to hold a noble position of "Faith and Outreach Leader" in my school. The position of faith and outreach is a role for a leader and person that will partake in the catholic society events.

***The position isn't about having a shiny badge and showing off that you're a leader, it's about helping people out whether it'd school-yard or work if there is something wrong it's your responsibility to take action.***

Another part of being faith and outreach is the opportunities that unfold to you once you meet your team. You help prepare events (Christmas, Easter etc.) and even get a role in the mass itself. The qualities needed for this role are Faith, Wisdom and Knowledge as is my school motto.

Faith.. *in Jesus and believing the right thing.*

Wisdom.. *being smart and doing what you believe is right.*

Knowledge.. *should help you further enhance above two traits also relating to knowing what is right and wrong.*

There are so many doors that open as you are more respected and looked up to, you learn more about Jesus, do some fundraising event get to go meet priests and learn all about the position of faith and outreach.

*I thoroughly believe the position of faith and outreach is something that will change you and teach you a lot and if you ever get a chance at the position you should go for it 100%.* ⁂

**TCAV**


**APPROVED CHARITABLE ORGANISATION**

**TCAV அங்கீகரிக்கப்பட்ட சமூக சேவை நிறுவனம்**

**OUR HEARTFELT SALUTE AND MANY THANKS TO ADVERTISERS AND WELL-WISHERS WHO HAVE HELPED US WHENEVER WE REQUESTED YOUR SUPPORT**

**TCAV Youth** is a section we like to introduce in our newsletter to integrate with our adolescent members.

**PLEASE SEND YOUR ARTICLES ON VIEWS, EXPERIENCE AND SOCIAL ACTIVITIES**






**Ajay** Yr.12
John Paul College, Frankston

## What does Christmas mean for a teenager?

**For ME Christmas is an EXPERIENCE ....**

"For unto us a child is born... Unto us a Son is given...." is a very common rather a Very important line in the history of the human race. This 'Son ' has revoked the mortal fate that was sealed against mankind since the fall at the Garden of Eden. That's why Christmas - the birth of the Savior, is celebrated all over the world. You didn't expect that kind of explanation did you?

*The celebration being deeply meaningful and widely accepted beyond the boundaries of Christianity has become an entertainment rather than a celebration of love.*

The Son of God, Jesus, came into the world and gave His life, a ransom for many. That was an act of pure love . The reason for the celebration. How do our generation celebrate Christmas? Do we see the crying baby in the manger? Or how does the humble man on the cross seem to us? On the night Jesus was born, the manger was actually the meeting place of heaven's righteousness and the world's worthlessness. The cross was a bridge for the beautiful exchange - glory for shame, beauty for ashes, the Son for the sinner. Ohh!! If only our generation, our people, would acknowledge the manifold wisdom of God - The rich salvation we have in Jesus!! We would ever be grateful to heaven's greatest act of love. If our minds were renewed by this truth. Christmas is a lifetime experience!!! ⁂

## Its Christmas Time

*Rebecca Daniel, Year 8*



*It's Christmas time*
*and the bells chime*
*A time to spend with family and friends*
*the fun never ends*

*Stir the biriyani,*
*soak the gulab jamun*
*and look out for Santa*
*as he flies past the moon*

*Nag your parents for treats and chocolate*
*then eventually empty your dads pocket*
*Buy new clothes and toys*
*and celebrate with young girls and boys*


*When you are happily playing with your friends*
*"Time to go to church" your mum will call*
*and in case you get annoyed*
*Just remember, that the birth of Jesus is the reason for this all*

**MERRY CHRISTMAS !!**

# TCAV Youth




Joe Saran (Year 7)



**It** was Christmas Eve! The clock was ticking and soon it would be midnight. John couldn't sleep. He was too excited! Suddenly the clock struck 12:00! It was Christmas, thought John. He couldn't wait to see the presents. He had asked for a heli-jet 3000. John was getting tired and soon enough he had gone to sleep.


The next day, John woke up for a start. He then ran quickly down the stairs to living room, surprisingly he sees nothing but empty space below the tree. He was shocked! "Have I been bad this year?" John was confused. RIING! The door bell rings and John opens the door to find his friend Jacob. John told him about how he didn't get any presents this year. Surprisingly Jacob had experienced the same issue. They both decided to visit Santa. John and Jacob both went on the plane to North Pole. Finally when they landed, John peered through the window to see snowflakes falling to the ground. It was extremely cold.

Now all they had to do was to find where Santa's workshop is and find out why they didn't get presents. It wasn't that hard finding it. The work shop was quiet. They saw small people in little beds sleeping peacefully. John had recognised they were elves. If these were the elves, then where was Santa? Finally Jacob spotted Santa in a corner snoring his nose off. John gave him a little nudge and Santa woke up.

Santa woke up tired. He looked at his time and went back to sleep. John and Jacob explained everything. Then Santa jerked forward and rang the bell. Santa must have over slept. Suddenly the whole workshop started running. In a few minutes, Santa was ready and was off to send his presents all over the world. Santa asked John and Jacob if they wanted to have a ride on his sleigh. Happily they accepted his offer.

Hours later, Santa had finished delivering his presents and dropped us off at our house. He once again thanked us and took off. We had Saved Christmas! I went inside to see the heli-jet 3000 I wanted. This was turning out to be the best Christmas ever! ⁂

*Best Compliments from....*




**355 - 359 LONSDALE STREET, DANDENONG, VIC, 3175**

**P: 9793 6888 F:9793 6866**



## நவின் பர்னாண்டோ
## (உப-செயலாளர்)

***கிறீஸ்துவின் அன்பு சகோதர சகோதரிகளே,***

இறைவன் இந்த வாய்ப்பினை எதிர்பாராத விதமாக கொடுத்திருக்கிறார். இதன் மூலம் உங்களை சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாம் இடம் பெயர்ந்து இந்த நாட்டுக்கு வந்திருந்தாலும், நம் மண்ணில் நாம் பெற்றுக்கொண்ட விசுவாசத்தையும் பக்தி முயற்சியையும் இங்கு நாம் பெற்றுக் கொள்ளவும், நம் குழந்தைகளும் இதில் பங்கு கொண்டு இறைவனின் அன்பில் வளரவும் அவருடைய மதிப்பீடுகளை எமது வாழ்வில் பிரதிபலிக்கவும், நாம் எமது TCAV சங்கத்திட்கூடாக ஏற்றெடுக்கும் புதிய முயற்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு தரவேண்டி அன்போடு கேட்டுக்கொளகிறோம்.

எமது விசுவாசம் இன்னும் அதிகமாக ஆழப்படுவதற்காக பல புதிய சிந்தனைகளையும், இன்னும் பல புதிய கருத்துக்களையும் வரவேற்கிறோம்.

உங்கள் அனைவருக்கும் TCAV இன் சார்பாக எனது கிறிஸ்மஸ் பெருவிழா மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நன்றி..           தங்கள் அன்பு சகோதரன்

**நவின் பர்னாண்டோ** (உப-செயலாளர்) ⁂

# Catholic Holy Days of Obligation 2014

- Mary, Mother of God (Wednesday, 1-1-14)
- Ash Wednesday (Wednesday, 5-3-14)
- Palm Sunday (Sunday, 13-4-14)
- Holy Thursday (Thursday, 17-04-14)
- Good Friday (Friday, 18-04-14)
- Holy Saturday (Saturday, 19-04-14)
- Easter Sunday (Sunday, 20-04-14)
- Divine Mercy Sunday (Sunday, 27-04-14)
- Ascension (Thursday, 29-05-14)
  (transferred to Sunday, 1-6-14)
- Pentecost Sunday (Sunday, 8-6-14)
- Trinity Sunday (Sunday, 15-6-14)
- Corpus Christi (Thursday, 19-6-14)
  (transferred to Sunday, 22-6-14)
- Assumption of Mary (Friday, 15-8-14)
- All Saints Day (Saturday, 1-11-14)
  (abrogated because it falls on a Saturday)
- First Sunday of Advent (Sunday 30-11-14)
- Immaculate Conception (Monday,8-12-14)
- Christmas (Thursday, 25-12-14)

On these days it is obligatory to attend Holy Mass and receive communion with proper preparation.




# கொடுப்பதில் தான் அதிக மகிழ்ச்சி உண்டு

**நம்மில் பலரும் அடிக்கடி நினைத்துப்பார்க்கும் ஒன்று தான் அமைதியும் வசதியும் நிறைந்த ஒரு சுபிட்ஷ வாழ்வு. அது எமக்கு இன்று அவுஸ்திரேலியாவில் தாராளமாக கிடைக்கிறது. ஆனால் அடிப்படையான தேவைகளையே பூர்த்தி செய்ய இயலாமல் எத்தனையோ ஆயிரம் நம் உறவுகள் இலங்கையிலும் இந்தியாவிலும் தவிக்கின்றன. எம்மிலே பலர் தனிப்பட்ட வழியில் இந்த உறவுகளுக்கு உதவிகள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களும் இறைவனின் ஆசீர்வாதங்களும் உரித்தாகட்டும்.**

**ஆட்டா! ஒரு வருடம் ஓடிப்போய் விட்டதே.! நான் இந்த வருடம் முழுவதிலுமே ஓரளவாவது ஆசீர்வதிக்கப்பட்டேனே. இந்த வருட கடைசியில் இருந்தாவது ஏதோ ஒரு சிறு தொகையை ஒரு நல்ல காரியத்துக்கு நன்கொடையாக செலுத்தலாமே என நினைப்பவர்களுக்கு, ஆத்தும ஆதாயங்களுக்கான ஒரு வாய்ப்பு.**

**நன்கொடை "பெறுவதிலா? அல்லது தருவதிலா? மகிழ்ச்சி" என்று ஆராய்ந்தால் ...**


**தருவதிலேயே தான் அதிக மகிழ்ச்சி!**

**இறந்து போன உங்கள் உறவுகளின் ஆத்மா நினைவாகவோ,**

**ஏன் உங்கள் ஆத்ம ஆதாயங்களுக்காகவும் கூட நீங்கள் உதவலாம் !**

| Project Name & Short Description | Country-Location | Cost/Month | Project End |
|---|---|---|---|
| **English & Maths Tuition with Evening Tea**<br>**வன்னியில் இளம் சிறார்களுக்கு சிறப்புப் பயிற்சி**<br>Many under privileged students are loosing interest and missing out many opportunities. We have organised 2-3 centres to provide results oriented after school assistance. | Vanni-Mullaithivu (Maathalan, Puthu Maathalan, Pokkanai, Iranai Paalai etc.) | $300 or $75 x 4 Families Only once a year ($6/month) | Two Year<br>**Already 14 Months have been pledged** |
| **Broadcasting/Production Cost for "Madha TV"**<br>**"மாதா 24 மணிநேர தொலைகாட்சி" பராமரிப்பு**<br>A noble & 1st 24 hr First Catholic Tamil TV Channel | Chennai, India | $250 or<br>$85 x 3 | One Year<br>**1 Month Pledged** |
| **Christmas Meals for orphans in Vanni/Kilinochchi** | Vanni-Mullaithivu | $200 | One off |
| **Aids Rehabilitation in Chennai** | Chennai, India | $200 | One off |
| **Xmas Dresses for orphans in Vanni/Kilinochchi** | Vanni-Mullaithivu | $90/$45 x 2 | One off |
| **Christmas Meals for orphans in South India** | Tirunelveli, India | $200 | One off |
| **Macro Small Business Help for Widows in Vanni**<br>**விதவைகளுக்கான சிறு தொழில் கோழி வளர்ப்பு)** | Vanni-Mullaithivu | $300 or<br>$100 x 3 | One Year |
| **Contribution to TCAV Holy Mass Wardrobe Kit** | TCAV Melbourne | | **Completed** |


MULTI-LINE
CARGO & TRAVELS
WE FREIGHT TO ANYWHERE IN THE WORLD!
SEND SOMETHING SPECIAL TO YOUR LOVED ONES THIS SEASON.
WE DELIVER TO ANY PART OF THE COUNTRY
240/21, PLENTY ROAD
BUNDOORA
VICTORIA 3083
AUSTRALIA
SEBASTIAN SYLVESTER
PH: (03) 9467 1400
FAX: (03) 9467 1500
MOB: 0431 641 275
ABN: 44 665 521 225
P.O. BOX 339, THOMASTOWN, VICTORIA 3074 AUSTRALIA. P : (03) 9467 1400 F : (03) 9467 1500 W : www.multi-line.com.au
AFFORDABLE & RELIABLE


Anton's Driving School
FOR SAFE AND EFFICIENT DRIVING
L P P
Anton Thavarajah
Bhavani Thavarajah
Professional Driving Instructors
Over 18 Years Experience
* Professional Instructors
* Late Model Cars (Automatic)
* Discount for Students
* 1 Hour free Lesson Conditions Apply
0402947240
0403564149

TCAV

# நம்மவர் நிகழ்வுகள்

எமது சங்கம் மற்றும் சகோதர அமைப்புகளின் நிகழ்வுகளின் நிழற்படங்கள்


Madhu Festival 18-08.13


Velankanni Madha Festival 18-8-13


Madhu Festival 18-08.13


Velankanni Madha Festival 18-8-13


All Souls Mass Dandenong


Madha TV Fundraising 16-11-13


All Souls Mass Bundoora


Madha TV Fundraising 16-11-13